பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

“நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்” (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 22 ரபீஉல்அவ்வல் - 1434 ஜனவரி, 2013

# இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான போக்குகள் : நமது பொறுப்பு என்ன?

அண்மைக்காலமாக இலங்கை முஸ்லிம்களுக்கெதிரான பல்வேறு வகையான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. கடந்த தசாப்தத்தில் பயங்கரவாதத்தினால் சொல்லொணாத துன்பங்களை அனுபவித்து வந்த முஸ்லிம்கள், அண்மைக்காலத்தில் - குறிப்பாக கடந்த வருடம் - பேரினவாத சக்திகளால் தாக்குதல்களுக்குள்ளாகி வருகின்றனர். முக்கியமாக இஸ்லாமிய நடைமுறைகளை சுதந்திரமாக கடைப்பிடிப்பதில் ஆங்காங்கே அழுத்தமான தடைகள் விதிக்கப்பட்டுவருகின்றன.

கடந்த 2012ம் ஆண்டில் இத்தகைய எதிர்ப்பலைகளை அதிகமாக அவதானிக்க முடிந்தது. அவை பற்றிய பதிவுகள் பின்வருமாறு :

**ஜனவரி :** சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது தொப்பி, தாடியுடன் புகைப்படம் எடுக்க முடியாது என தடைவிதிக்கப்பட்டது. பின்னர் பல பிரயத்தனங்களின் பின் அத் தடை நீக்கப்பட்டது.

**பெப்ரவரி :** அம்பாறை, அஷ்ரப் நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 87 ஏக்கர் விவசாய, குடியிருப்பு நிலம் இராணுவத்தினால் சுவீகரிக்கப்பட்டது. இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டதோடு, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

**மார்ச் :** மன்னாரிலுள்ள தினச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டனர். பின்னர் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 33 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

**ஏப்ரல் 20 :** தம்புள்ள ஹைரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயல் பௌத்த புனிதப் பிரதேசத்தில் அமைந்திருப்பதாகவும் அவ்விடத்திலிருந்து பள்ளிவாசல் அகற்றப்பட வேண்டும் எனக் கோரியும் தம்புள்ளை ரங்கிரி விகாராதிபதி தலைமையிலான குழுவினர் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அன்றைய தினம் அக்குழுவினர் பள்ளிவாசலின் உடைமைகளுக்கு சேதம் விளைவித்ததோடு, ஜும்ஆ தொழுகையை நடத்தவிடாது தடுத்தனர். இப்பிரச்சினை இன்று வரை தொடர்கிறது. தற்போது வீதி அபிவிருத்தி எனும் போர்வையில் பள்ளிவாசல் முற்றாக அகற்றப்படலாம் என பள்ளிவாசல் நிர்வாகம் அச்சம் தெரிவித்துள்ளது.

**மே 25 :** தெஹிவளை கல்விகாரை வீதியில் உள்ள தாருர் ரஹ்மான் பள்ளிவாசல் மாடு அறுக்கப்படும் மடுவமாக செயற்படுவதாகக் குற்றம் சுமத்தி பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவொன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது.

**மே :** குருநாகல் ஆரிய சிங்களவத்தை உமர் இப்னுல் கத்தாப் மத்ரஸாவில் தொழுகை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப் பிரதேசத்திலுள்ள விகாரை ஒன்றின் பிக்குகள் அடங்கிய குழு எதிர்ப்புத் தெரிவித்தது. தொடர்ந்து தொழுகை நடத்தக் கூடாது என உத்தரவிட்டு பலவந்தமான முறையில் பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் கையொப்பமிட்டு கடிதமொன்றை பெற்றனர். இன்று வரை பிரச்சினைக்கான உரிய தீர்வுகள் கிடைக்கவில்லை.

**ஜூன் :** திருகோணமலை கருமலையூற்று கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிவாயல் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருப்பதாகக் கூறப்பட்டு அங்கு மார்க்கக் கடமைகளை நிறைவேற்றமுடியாது என தடுக்கப்பட்டதோடு, இன்றும் அந்நிலை தொடர்கிறது.

**ஜூன் :** மூதூர் மூன்றாம் கட்டை மலையடிவாரத்தில் சிலை வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பிரதேச மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதாகத் தெரிவித்து பௌத்த கலாசார நிலையம் ஒன்றையும் அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். தற்போது அங்கு பாரிய புத்தர் சிலை அமைத்து சுற்றுலா செல்லும் பௌத்தர்கள் மாலை நேரங்களில் பிரித் ஓதி வருகின்றனர். மலை உச்சியிலும் புத்தர் சிலை வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரியவருகிறது.

**ஜூலை :** குருநாகல் தெதுருஓயாகம தாருல் அக்ரம் தக்கியாவில் ரமழான் மாத இரவுத் தொழுகைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பிரதேச பிக்குகள் தலைமையிலான 150 பேர் பள்ளிவாசல் முன்றலில் கதிரை போட்டு அமர்ந்து பிரித் ஓதினர்.

**ஜூலை :** தெஹிவளை பீரிஸ் மாவத்தையிலுள்ள தாருல் அக்ரம் குர்ஆன் மத்ரஸாவில் கல்வி நடவடிக்கைகளைத் தவிர வேறு எந்த மார்க்கக் கடமைகளும் செய்யக்கூடாது என வலியுறுத்தி புத்தசாசன அமைச்சின் செயலாளரின்

பணிப்பின் பேரில் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கடிதமொன்று அனுப்பப்பட்டது.

**ஜூலை :** ராஜகிரிய ஒபசேகரபுரவிலுள்ள ஜாமிஉ தாரில் ஈமான் பள்ளிவாசலில் தொழுகை நடத்துவதற்கு பௌத்த பிக்குகள் தடைகளை ஏற்படுத்தி ரமழான் காலத்தில் இரவுத் தொழுகைக்கு இடையூறு விளைவித்தனர்.

**ஓகஸ்ட் :** மட்டக்களப்பு உன்னிச்சை இருநூறுவில் கிராமத்தில் பள்ளிவாசல் உட்பட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

**ஓகஸ்ட் :** சிங்களவர்கள் வாழாத கற்பிட்டி திகழி பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டது. வெளிப்பிரதேசங்களிலிருந்து வரும் பௌத்தர்கள் இங்கு மாலை நேரத்தில் வழிபாடுகளில் ஈடுபட ஆரம்பித்தமையானது சிங்கள குடியேற்றத்தை நோக்கியதாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

**ஓகஸ்ட் :** வெல்லம்பிட்டி கொஹிலவத்தை பள்ளிவாசலினுள் இரு சிங்கள இளைஞர்கள் மதுபோதையுடன் அடாவடித்தனம் புரிந்தனர்.

**ஒக்டோபர் :** அநுராதபுரம் புதியநகர் மல்வத்து ஓயா லேன் பள்ளிவாசலுக்கு தீ வைக்கப்பட்டது. இதனால் பள்ளிவாசல் சொத்துகளுக்கு பாரிய சேதம் ஏற்பட்டது.

**நவம்பர் :** கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் வர்த்தக நிலையங்களில் சிங்களவர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டாம் என சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

**டிசம்பர் :** ஹலால் சான்றிதழுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய மற்றும் பிக்குகள் இணைந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

**டிசம்பர் :** மஹியங்கனை பள்ளிவாசலை புனர் நிர்மாணம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து பஸ் நிலையத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

பொது பல சேனா, ஜாதிக ஹெல உருமய போன்ற பௌத்த தீவிரவாத அமைப்புகளால் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இத்தகைய தாக்குதல்களுக்கு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றுள் இலங்கையில் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி, கல்வி அடைவுகளில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி ஆகியவையும் காரணங்களாக இருக்கலாம் என சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கை சட்டக்கல்லூரியில் 2013ம் கல்வியாண்டு சட்டக் கல்வியைத் தொர்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட 309 பேரில் 78 பேர் முஸ்லிம்களாக இருந்ததால் ஆத்திரமடைந்த பௌத்த கடும்போக்காளர்கள் நீதித்துறை முஸ்லிம் மயமாகிவிட்டதாகவும் சட்டக்கல்லூரிக்கான அனுமதிப் பரீட்சையில் திட்டமிட்ட வகையில் முஸ்லிம்களுக்கு சார்பாக முடிவுகள் வெளியிடப்பட்டதாகவும் குற்றம் சுமத்தினர். ஆயினும் அனைத்துப் பரீட்சைகளையும் போன்று சட்டக்கல்லூரிப் பரீட்சையும் பரீட்சைத் திணைக்களத்தினாலேயே நடத்தப்படுகின்றது என்று நீதியமைச்சர் றஊப் ஹகீம் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களுடன் ஒப்பிடும் போது முஸ்லிம்களின் உயர் கல்வியில் பாரிய முன்னேற்றம் காணப்படுவதாக அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். 2009ம் ஆண்டிலிருந்து நாட்டின் உயர் கல்விக்காக பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவோரின் புள்ளிவிபரங்களைப் பார்க்கும் போது முஸ்லிம்களின் அனுமதி வீதம் 10.8 வீதத்தால் அதிகரித்துள்ளது. இது ஒரு அபார வளர்ச்சிப் போக்காகும். சிங்களவர்களின் பல்கலைக்கழக அனுமதி வீதம் 09 வீதத்தாலும் தமிழர்களின் அனுமதி வீதம் 02 வீதத்தாலும் வீழ்ச்சிகண்டுள்ள நிலையில் கல்வித்துறையில் முன்னேற நாம் முஸ்லிம்களை முன்மாதிரியாக கொள்ள வேண்டும் எனவும் கல்வியமைச்சர் தெரிவத்தார். கல்வி அமைச்சரின் இக் கூற்று உண்மைக்குப் புறம்பானதாகும் என்றும் அண்மைக்காலத்தில் முஸ்லிம்களின் கல்வி நிலையில் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டிருப்பினும் அவர் குறிப்பிடுவது போன்று 10.8 வீத அபார வளர்ச்சியை எட்டவில்லை என்றும் இது குறித்து சில முஸ்லிம் கல்விமான்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். கல்வி அமைச்சரின் கூற்றில் முஸ்லிம்கள் மீதான அக்கறை தென்பட்டாலும் இத்தகைய உண்மைக்குப் புறம்பான மிகைப்படுத்தப்பட்ட அறிக்கைகளும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கடும்போக்காளர்கள் முஸ்லிம்கள் மீது காழ்ப்புணர்ச்சிகொள்வதற்கும் தாக்குதல் நடத்துவதற்கும் காரணமாக அமைகின்றன என்றும் அக்கல்விமான்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதிகரித்து வரும் இத்தகைய முஸ்லிம் விரோதப் போக்குகள் குறித்து நாம் கரிசனையற்றிருக்கமுடியாது. நமது கவனயீனம் எதிராளிகளுக்கு உத்வேகத்தை அளிப்பதோடு, எதிர்காலத்தில் நமக்கெதிரான நிலைப்பாடுகள் மேலும் மோசமான நிலைக்குச் செல்வதற்குக் காரணமாக அமைந்துவிடும். எனவே, முஸ்லிம்களாகிய நாம்,

1. நாம் எதிர்கொள்ளும் சவால்கள், தாக்குதல்களிலிருந்து நம்மைப் பாதுகாக்குமாறு அடிக்கடி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தல்

2. இத்தகைய தாக்குதல்கள், சதித்திட்டங்கள் பற்றிய உண்மையான தகவல்களை ஒவ்வொரு முஸ்லிமும்- ஆண்களும் பெண்களும் - முழுமையாக சமூகக் கரிசனையோடு அறிந்துகொள்ளல். நமக்கு எதிராக என்ன நடக்கிறது என்பது பற்றி பல முஸ்லிம்களுக்கு எதுவுமே தெரியாது என்பது பெருந் துரதிர்ஷ்டமாகும்

3. நமக்கு அறிமுகமான மாற்றுமத சகோதரர்களுக்கு முஸ்லிம்கள் பற்றியும் இந்நாட்டுக்கு முஸ்லிம்கள் செய்த, செய்து வருகின்ற பங்களிப்புகள் பற்றியும் தெளிவுபடுத்தல். இணையத் தளம் மற்றும் குயஉநடிழழம போன்ற சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தியும் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

4. நமது சமூக, அரசியல் தலைமைகளை இது தொடர்பில் சமூக உணர்வுடன் செயற்படுமாறும் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல்கள் இடம்பெறாமல் இருப்பதற்கான உத்தரவாதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் தொடர்ச்சியாக தூண்டுதல் வழங்குதல்

இதே வேளை முஸ்லிம்கள் மீதான அண்மைய தாக்குதல்களுக்கு முஸ்லிம்களிடம் காணப்படுகின்ற சில தவறான செயற்பாடுகளும் காரணமாக இருக்கலாம் என புத்திஜீவிகள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். தேசிய நிகழ்வுகளில் அக்கறை காட்டாமலும் பங்களிப்புச் செய்யாமலும் முஸ்லிம்கள் ஒதுங்கியிருத்தல், பல முஸ்லிம் வர்த்தகர்களிடம் காணப்படுகின்ற ஏமாற்றும் மோசடியும் கொள்ளை இலாபமும் கொண்ட வியாபார நடைமுறைகள், பிற மதத்தவரின் மத அனுஷ்டானங்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ளல், பெரும்பான்மை

தொடர்ச்சி 04ம் பக்கம்...

# சிங்கள மக்களுக்கு ஒரு சிங்கள சகோதரனின் மடல்

**(இணையதளங்களில் வெளியான மடலின் தமிழாக்கம்)**

அன்பார்ந்த என் சிங்கள மக்களுக்கு,
நான் ஹிரான் குணரத்ன. கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவன். இலங்கைச் சமூகங்களுக்கு மத்தியில் இனவாதத்தை ஏற்படுத்த முனையும் சிலரின் அண்மைய செயற்பாடுகள் தொடர்பில் என் சமூகமாகிய உங்களுடன் (சிங்கள மக்களுடன்) இம்மடலினூடாக உரையாட விரும்புகிறேன்.

இந்த நாட்டு மக்களாகிய நாம் 30 வருட யுத்த அழிவுகளிலிருந்து இப்போதுதான் மீண்டிருக்கிறோம். இந்நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூவினத்தவர் வாழ்கிறோம். இம்மூவினத்தாரும் நீண்டகாலமாக ஒற்றுமையாக வாழ்ந்ததே இந்நாட்டின் வரலாறாகும். எமது இளந் தலைமுறையினர் சந்தர்ப்பவாதிகளாலும் அரசியல்வாதிகளாலும் தமது பிழைப்புக்காக தவறாக வழிநடத்தப்படுவது பெருந் துரதிர்ஷ்டமாகும்.

நாம் பெரும்பான்மை இனமாக இருந்தாலும் தமிழ், முஸ்லிம்களை நாம் புறக்கணித்துவிட முடியாது. அவர்கள் வேறு நாட்டவரல்ல, இந்நாட்டின் குடிமக்களே. ஆசிய நாடான மலேஷியாவைப் பாருங்கள். அங்கே 60% முஸ்லிம்கள், 20% சீன பௌத்தர்கள், 20% தமிழர்கள். அந்நாட்டில் இனப் பிரச்சினை ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோமா? அந்த நாடு எவ்வாறனதொரு அபிவிருத்தியை கண்டிருக்கிறது! இவ்வாறே சிங்கப்பூரை நோக்குங்கள், அங்கு 50% சீனர்கள், 25% முஸ்லிம்கள், 25% தமிழர்கள். இருந்தும் அவர்கள் மற்ற மதத்தாரின் அடையாளம், மதம், மொழி, கலாசாரம் ஆகியவற்றை மதித்து நடக்கிறார்கள். எப்படியானதொரு முன்னேற்றத்தை அந்நாடு அடைந்திருக்கிறது என்பதைப் பாருங்கள். பிறரை மதித்து இணைந்து வாழ்வதில்தான் வெற்றி தங்கியிருக்கிறது என்பதை அவர்கள் திடமாக நம்புகிறார்கள்.

நாம் யுத்தத்தால் பாதிப்புற்ற போது யார் நமக்கு உதவினார்கள்? இந்தியாவா? சீனாவா? இரண்டுமே இல்லை. இவ்விரண்டு நாடுகளும் நம்மை சுரண்டுவதில்தான் குறியாக இருக்கின்றன. 10 ரூபாவை நமக்கு அன்பளிப்பாக தந்துவிட்டு 20 ரூபாவை நம்மிடமிருந்து பிடுங்கிக்கொள்கின்றன இவ்விரு நாடுகளும். யுத்த காலத்தில் சீனா நமக்கு ஆயுதங்களை விற்றது ... பெருந் தொகைப் பணத்திற்கு, இதே போல் இந்தியா நமக்கு ஒரு தொகைப் பணம் கடன் தந்து விட்டு கொழும்பிலுள்ள நிலங்களையெல்லாம் சுரண்டிக்கொண்டிருக்கிறது. இவ்விரு நாடுகளுமே நமக்குள் பிளவுகளை ஏற்படுத்துவதிலும் முனைப்பாக செயற்படுகின்றன.

உண்மையில் நமக்கு உதவி செய்த, செய்து கொண்டிருக்கின்ற நாடுகள் மத்திய கிழக்கு அறபு நாடுகளாகும். அமெரிக்காவோ, ஐரோப்பிய நாடுகளோ நமக்கு உதவவில்லை. அண்மையில் ஐ.நாவில் நடைபெற்ற யுத்தக் குற்ற விசாரணையின் போது அமெரிக்கா உட்பட அனைத்து ஐரோப்பிய நாடுகளும் நமக்கு எதிராகவே வாக்களித்தன. ஏன் நமது அண்டை நாடான இந்தியா கூட நமக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளும் மற்றும் மலேஷியா, ஈரான், ரஷ்யா ஆகிய நாடுகளுமே நமக்கு ஆதரவாக நின்றன என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

அதிகளவான அந்நியச் செலாவணியை நாம் எங்கிருந்து பெறுகிறோம். சந்தேகமில்லாமல் நமது நாட்டு மக்கள் அறபு நாடுகளில் பணிபுரிந்து பெறும் சம்பளத்திலிருந்துதான். இந்த அறபு நாடுகள் நமது மக்களை பணியாளர்களாக ஏற்றுக்கொள்ள மறுத்தால் நமது நிலை? அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளெல்லாம் பிற நாட்டவர்களை பணியாளர்களாக அமர்த்துவதில் கடுமையான சட்டதிட்டங்களை அமுல்படுத்திவரும் வேளை அறபு நாடுகள்தான் சட்டத்தை தளர்த்தியிருக்கிறது. அதனால்தான் நமது நாட்டு மக்கள் அதிகளவில் அறபு நாடுகளுக்கு சென்று தமது வாழ்க்கையைச் செழிப்பாக்க முடிகிறது.

நீண்டகால கடன் திட்டத்தின் அடிப்படையிலும் குறைந்த விலையிலும் ஈரான்தான் நமக்கு எண்ணெயை தருகிறது. யுத்தகாலத்தின் போது நமக்கு தொழினுட்பத்தைத் தந்தது பாகிஸ்தான் எனும் முஸ்லிம் நாடு. நமது பிரதான ஏற்றுமதி பொருளான தேயிலையை அதிகளவில் இறக்குமதி செய்வது மத்திய கிழக்கு அறபு நாடுகளே.

முஸ்லிம்களுக்கெதிரான நமது செயற்பாடுகளை உலக நாடுகள் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றன. நாம் மிகவும் நாகரிகமற்ற, பிறரை மதிக்கத் தெரியாத ஒரு சமூகம் என்பதை அவை உணர்ந்துகொண்டிருக்கின்றன. முஸ்லிம்கள், தமிழர்கள் மீது நாம் வெளிப்படுத்துகின்ற பகைமை, குரோதம், ஆட்கடத்தல், அத்துமீறல் அனைத்தும் நமது சுயநல அரசியல்வாதிகளின் தூண்டுதலினால்தான் நடைபெறுகின்றன என்பதை நாம் இன்னும் புரிந்துகொள்ளாமலிருக்கிறோம்.

நாம் பௌத்தர்கள் என்று சொல்லிக்கொள்கிறோம். நமக்கென்று பஞ்சசீலக்கொள்கை இருக்கிறது. அதை நமது அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கிறோமா? முஸ்லிம்களோ, தமிழர்களோ தமது மதத்தைப் பின்பற்ற முனையும் போது நாம் ஏன் ஆத்திரமடைகிறோம்? நமது (பௌத்த) மதத்தில் மதுபானம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மதுபானம் அருந்துபவர்களில் 95 வீதமானோர் சிங்களவர்கள்தான். பன்சாலைகளை உடைப்பது யார்? பௌத்த பிக்குகளை கொலைசெய்வது யார்? முஸ்லிம்களா? தமிழர்களா? இல்லை, நமது பௌத்தர்கள்தான். நம்மை எப்படி உண்மையான பௌத்தர்கள் என்று சொல்லிக்கொள்வது?
ஒவ்வொரு நாளும் இந்நாட்டில் கொலைகளும், பாலியல் வல்லுறவுகளும் அதிகரித்தே செல்கின்றன. நமது சிங்கள ஊடகங்கள் நமக்கு நன்மை செய்கின்றனவா? இல்லை, அவை அனைத்தும் அரசியல்வாதிகளின் சட்டைப்பைகளுக்குள் இருக்கின்றன. குற்றமிழைத்தவர்களே! உங்கள் உள் மனதோடு சற்று பேசிப் பாருங்கள், உண்மை தெரிய வரும்.

பௌத்தர்களாகிய நாங்கள் விருந்துபசாரத்திலும் உபசரிப்பதிலும் சிறந்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறோம். அந்த உபசரிப்பு வெளிநாட்டவர்களுக்கு மட்டும்தானா? நமது சகோதரர்களான, இந்நாட்டில் வாழ்கின்ற ஏனைய சமூகத்தாருக்கு இல்லையா? வர்த்தகம் செய்வது எப்படி என்பதை முஸ்லிம்களிடமிருந்து கற்றுக்கொள்வோம். கடின உழைப்பை தமிழ் மக்களிடமிருந்து கற்றுக்கொள்வோம்.

நமது சமூகத்தில் நல்ல மக்களும் இருக்கிறார்கள் என்பதை நான் மறந்துவிடவில்லை. அரசியல்வாதிகளும் வெளிநாட்டு சக்திகளின் துணையோடு இயங்கும் சில நிறுவனங்களும்தான் சமூகங்களுக்கிடையில் பகையையும் குரோதத்தையும் வளர்க்க முயல்கின்றன. துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான பௌத்த துறவிகளும் தலைவர்களும் பொருளாசை பிடித்தலைகிறார்கள். அவர்களிடமிருந்து நல்லவிடயங்களை எதிர்பார்க்க முடியாது. மிகச் சில பௌத்த பிக்குகள் மட்டுமே புத்தர் போதித்தவாறு எளிமையாக வாழ்கிறார்கள். எனினும் அத்தகைய நல்லவர்கள் வெளியுலகுக்கு வருவதில்லை.

பிறர் மேல் பொறாமை, குரோதம் கொள்வதை தவிர்ப்போம். உண்மையான மத நம்பிக்கையோடும் விழுமியங்களோடும் வாழ்வோம்.

இவ்வண்ணம்
ஹிரான் குணரத்ன

ஆங்கிலத்தில் : www.jaffnamuslim.com
தமிழில் : அபூஸைனப்

# நபியை நேசித்தல்

முஸ்லிமாக வாழும் ஒவ்வொருவரும் - ஆணாயினும் பெண்ணாயினும் - அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வை நேசிப்பது எப்படிக் கடமையானதோ அவ்வாறே அவனது தூதரான நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்பு வைப்பதும் கட்டாயக் கடமையாகும். இல்லையேல் அவர் முஸ்லிமாக இருக்க முடியாது. இதைத்தான் நபியவர்களே பின்வருமாறு குறிப்பிட்டார்கள் : 'உங்களில் ஒருவர் தனது குழந்தையை விட, தனது பெற்றோரை விட, மனிதர்கள் அனைவரையும் விட என்னை நேசிக்கும் வரை ஈமான் கொண்டவராக முடியாது' (புஹாரி, முஸ்லிம்).

நபிகளார் நம் மத்தியில் உயிருடன் இல்லை. ஆயினும் அவர்களை நேசித்தே ஆக வேண்டும். அவ்வாறெனில் அந்த நேசத்தை எப்படி வெளிப்படுத்துவது? இக் கேள்விக்குரிய விடையை அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு முன்வைக்கிறான் : 'நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னை (நபியை) பின்பற்றுங்கள், அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று (நபியே அவர்களிடம்) கூறுங்கள்' (3 : 31).

எனவே நபியை - அவர்கள் மார்க்கம் என்ற அடிப்படையில் கூறியவற்றை, செய்துகாட்டியவற்றை, பிறர் செய்ய அங்கீகரித்தவற்றை அப்படியே உள்ளத்தால் ஏற்றுப் பின்பற்றும் போது நபியை நேசித்தவர்களாகி விட முடியும். உள்ளத்தில் நபி மீது உண்மையான அன்பு வைத்திருப்பவர் மாத்திரமே அந்த நபியைப் பின்பற்ற முடியும். ஒன்றிரண்டு விடயங்களில் மாத்திரம் நபியை நேசிப்பவரால் அவர்களை முழுமையாகப் பின்பற்ற முடியாது. மாற்றுமதங்களைச் சேர்ந்த பலர் ஒரு சில விடயங்களுக்காக நபி மீது நேசம் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் அதிகமான மாற்று மத அறிஞர்கள் நபியைப் போற்றிப் புகழ்ந்திருப்பதையும் அவர்களைப் பற்றி புத்தகங்களில் எழுதிக் குவித்திருப்பதையும் பார்க்கிறோம். ஆயினும் அந்த அறிஞர்களை நாம் முஸ்லிம்களாகக் கருதுவதில்லை. ஏனெனில் அவர்கள் அந்த நபியைப் பின்பற்றவில்லை. எனவே அவர்கள் உள்ளத்தில் வைத்திருக்கும் நபி மீதான நேசத்தினால் எந்தப் பயனுமில்லை. வெறுமனே கவிதைகளிலும் கட்டுரைகளிலும் கோஷங்கள் எழுப்புவதன் மூலமும் நபியைப் புகழ்ந்துவிடுவதால் அது உண்மையான நேசமாகிவிட முடியாது என்பதையும் இதிலிருந்து புரிந்துகொள்கிறோம்.

அவ்வாறெனில் நபியைப் போற்றக் கூடாதா என்ற கேள்வி எழலாம். நிச்சயமாகப் போற்றிப் புகழ முடியும். அல்லாஹ்வே அவர்களை அல்குர்ஆனில் பல இடங்களில் புகழ்ந்துபேசுகிறான். ஸஹாபாக்கள் நபியை அதிகம் புகழ்ந்திருக்கிறார்கள். ஆயினும் அவ்வாறு நபியைப் புகழும் போது இரண்டு விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும் :

1. அந்தப் போற்றுதலும் புகழ் பாடுதலும் நபியை முழுமையாகப் பின்பற்றுவதனூடாக வெளிப்பட வேண்டும். நபியை வெறுமனே வானளாவப் புகழ்கிறோம். ஆனால் நடைமுறையில் அவர்கள் கூறியவற்றையும் செய்துகாட்டியவற்றையும் புறந்தள்ளி விட்டு நமது மனங்களுக்குப் பிடித்தமானவற்றையெல்லாம் மார்க்கம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்துகிறோம் எனில் அது நபி மீதான உண்மையான நேசமல்ல, நாம் எவ்வளவுதான் தலைகீழாக நின்று நிரூபிக்க முற்பட்டாலும் கூட...

2. நபியைப் புகழ்வதும் போற்றுவதும் மார்க்க வரையறைக்குட்பட்டதாக இருக்க வேண்டும். நபியை அவர்களது நபியென்ற அந்தஸ்திலிருந்து அல்லாஹ்வின் அந்தஸ்துக்கு உயர்த்தியோ, பொய்யான கற்பனைகளைப் புனைந்து நபியைப் புகழ்ந்தோ பாடுவதன் மூலமோ, பொய்யான சம்பவங்களைப் பேசுவதன் மூலமோ நபியை உண்மைக்குண்மையாக நேசித்ததாகிவிட முடியாது. நபியவர்கள் கூறினார்கள் : 'கிறிஸ்தவர்கள் ஈஸா நபியை எல்லை மீறிப் புகழ்ந்தது போல் என்னை நீங்கள் எல்லை மீறிப் புகழ்ந்துவிட வேண்டாம். நான் அல்லாஹ்வின் அடிமையாவேன். எனவே அல்லாஹ்வின் அடிமையும் அவனது தூதரும் என்றே (என்னை) கூறுங்கள்' (புஹாரி).

நபியைப் புகழ்ந்து பாடுவதாகக் கூறப்படும் ஸுப்ஹான மௌலித் போன்ற பாடல் தொகுப்புகளில் நபியவர்களைப் பற்றிய பொய்யான கற்பனைச் சம்பவங்களும் நபியவர்களை அல்லாஹ்வின் அந்தஸ்துக்கு உயர்த்தும் வரிகளும் அதிகமாக காணப்படுகின்றன. எனவே அவற்றை பாடுவது நிச்சயமாக நபியைப் புகழ்வதாக அமையாது. நபியவர்களையும் அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தையும் இழிவுபடுத்துவதாகவே அமையும்.

வாழ்க்கை முழுமைக்கும் வழிகாட்டியாக அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் அன்புக்குரிய நபியை முழுமையாக அறிந்து பின்பற்றி அவர்களின் நேசத்தைப் பெற்றுக்கொள்வோம். நாளை மறுமையில் அந்த நபியோடு சுவர்க்கத்தில் குடியிருக்கும் பெரும் பாக்கியத்தை தந்தருளுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

**இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான...**

02ம் பக்க தொடர்ச்சி...

இனத்தவரின் உணர்வுகளை மதிக்காமல் நடந்துகொள்ளல் (உதாரணமாக - இலங்கை கிரிகட் அணி தோல்வியடையும் போது பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சியடைதல்) போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இக்குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லாமல் இல்லை. அவ்வாறாயின் இவற்றை களைவதற்கு முஸ்லிம்களாகிய நாம் உடன் முன்வர வேண்டும்.

நாம் பௌத்த பெரும்பான்மை நாட்டில் வாழ்கிறோம் என்ற உணர்வோடு, நமது மார்க்கத்துக்கு முரணில்லாத தேசிய நிகழ்வுகளில் பங்கேற்றல், நமது முன்னோர்களான முஸ்லிம்கள் தமது வியாபார நடவடிக்கைகளை நேர்மையோடும் நாணயத்தோடும் மேற்கொண்டு பல மாற்றுமதத்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்குக் கூட காரணமாக இருந்ததுபோன்று இன்றைய முஸ்லிம் வியாபாரிகளும் தமது வியாபாரத்தில் இறையச்சம், நேர்மை, வாய்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்தல், பிறரின் மனங்களைப் புண்படுத்தாமல் நடந்துகொள்ளல், விளையாட்டின் போது எந்த நாட்டு அணிக்கு நாம் ஆதரவு தெரிவித்தாலும் இலங்கை அணி தோல்வியடையும் போது நாம் சகிப்புத்தன்மையோடு அமைதிகாத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். அனைத்துக்கும் மேலாக நாம் இஸ்லாம் என்ற இறைமார்க்கத்தை ஏனைய சமூகத்தாருக்கும் எத்திவைக்கும் மாபெரும் பொறுப்பைச் சுமந்திருக்கிறோம் என்பதை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வும் அவனது தூதரும் உருவாக்க முனைந்த மனித நேயமும் நேர்மையும் இறையச்சமும் கொண்ட உண்மை முஸ்லிம்களாக வாழ வேண்டிய மிக முக்கியமான தருணங்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**வாராந்த ஜும்ஆ பயான்களையும், விஷேட மார்க்கச் சொற்பொழிவுகளையும் இணையதளத்தினூடாக நேரடியாக செவிமடுக்க கீழ்க்காணும் இணையதள முகவரியை நாடுங்கள்**

**www.evrtj.webs.com**

# சமூகத்தில் பரவியுள்ள போலி ஹதீஸ்கள்

போலி ஹதீஸ்கள் என்ற சொற்றொடரைப் பார்க்கும் போது சிலருக்கு பெரும் ஆச்சரியம் ஏற்படக் கூடும். ஹதீஸ்களில் போலியானவையும் உள்ளனவா என்று வியப்புடன் வினவக் கூடும். ஆம்! அதிகமான போலியான ஹதீஸ்கள் நபியவர்களின் பெயரால் சமூகத்தில் உலா வந்துகொண்டிருக்கின்றன.

நபியவர்களின் சொல், செயல், அங்கீகாரம், அவர்களைப் பற்றிய வர்ணனை ஆகியவையே ஹதீஸ்கள் என்று சுருக்கமாக கூறலாம். இதற்கு மாறாக நபியவர்கள் கூறாத, செய்து காட்டாத, அங்கீகரிக்காத எத்தனையோ கூற்றுகள் ஹதீஸ் என்ற அடைமொழியோடு பல்வேறு மார்க்க சொற்பொழிவுகளில் கூறப்படுகின்றன. பல நூல்களில் எழுதப்படுகின்றன. நபியவர்கள் சொல்லாத, செய்யாத, அங்கீகரிக்காத விடயங்களை நபியவர்களின் ஹதீஸ்கள் என்று கூறுவது மிகப் பெரும் பாவமாகும் என்பதை பலர் உணர்வதில்லை. நபிகளார் கூறினார்கள் : ''யார் என் மீது வேண்டுமென்று பொய்யுரைக்கிறாரோ அவர் தன் இருப்பிடத்தை நரகத்தில் ஆக்கிக் கொள்ளட்டும்''. புஹாரி, முஸ்லிம் உட்பட பல ஹதீஸ் நூல்களில் இடம்பெற்றிருக்கும் இந்த ஹதீஸ் சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட ஸஹாபாக்களினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நபியவர்களின் எந்தவொரு ஹதீஸும் இத்தனை பெரும் எண்ணிக்கையான ஸஹாபாக்களினால் அறிவிக்கப்படவில்லை என்று அனைத்து ஹதீஸ்கலை அறிஞர்களும் குறிப்பிடுகிறார்கள். நபியவர்களின் ஆயிரக் கணக்கான ஹதீஸ்களில் இந்த ஹதீஸ் மாத்திரமே அதிக எண்ணிக்கையான ஸஹாபாக்களினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது எனில், நபியவர்களின் ஹதீஸ்கள் அல்லாதவற்றை ஹதீஸ்கள் என்று அறிவிப்பது பெரும் பாவம் என்பதை சமூகத்திற்கு உணர்த்துவதற்காகத்தான் என்பது தெளிவாகிறது.

நபி சொல்லாத விடயங்களை மறந்துபோய் ஹதீஸ்கள் என்று அறிவித்து, நரகத்திற்கு சென்று விடுவோமோ என்று பயந்து, நபியவர்களோடு மிக நெருக்கமாக இருந்த ஸஹாபாக்கள் பலர் ஹதீஸ்களை அறிவிக்காமலே இருந்திருக்கிறார்கள். ஸுபைர் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட பத்து ஸஹாபாக்களில் ஒருவர். ஒரு தடவை அவர்களிடம் அவரது மகன் அப்துல்லாஹ் அவர்கள், 'சிலர் நபியவர்களுடைய ஹதீஸ்களை அறிவிப்பது போன்று தாங்கள் அறிவிக்க நான் கேட்டதில்லையே, என்ன காரணம்?' என்று கேட்டார். அதற்கு ஸுபைர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள், 'நான் நபியவர்களை விட்டுப் பிரியாமல் அவர்களுக்கு அருகிலேயே இருந்தேன் என்றாலும், என் மீது யார் பொய் சொல்கிறானோ அவன் தனது தங்குமிடத்தை நரகத்தில் அமைத்துக்கொள்ளட்டும் என்று நபியவர்கள் சொல்ல நான் கேட்டதால் அவர்களைப் பற்றி ஹதீஸ்களை அறிவிக்க நான் அஞ்சுகிறேன்' என்று கூறினார்கள் (ஸஹீஹுல் புஹாரி).

ஸைத் பின் அர்க்கம் என்ற ஸஹாபியிடம் சிலர், 'எங்களுக்கு நபியவர்கள் பற்றிய ஹதீஸ்களைக் கூறுங்கள் என்று கூறிய போது நாங்கள் முதியவர்களாகி விட்டோம், மறந்து விட்டோம், நபியவர்களைப் பற்றி ஹதீஸ்களை அறிவிப்பது சாதாரண விடயமல்ல என்று கூறினார்கள் (நூல் : ஜாமிஉ இப்னி அப்தில் பர்)

சுமார் பத்து வருடங்கள் நபியவர்களுக்குப் பணிவிடை செய்த அனஸ் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் நபியவர்களைப் பற்றிய ஹதீஸ்களைக் கூறிவிட்டு 'அல்லது நபியவர்கள் சொன்னது போன்று' என்ற வார்த்தையைக் கூறுவார்கள். நபியவர்கள் மீது பொய்யாக ஏதேனும் சொற்கள் தம் நாவிலிருந்து வந்துவிடுமோ என்ற அச்சத்தால்தான் அவ்வாறு சொல்வதாக அந்த ஸஹாபி கூறுவார்கள் (நூல் : அஸ்ஸுன்னா வமகானதுஹா).

இந்த ஸஹாபாக்களெல்லாம் நபியவர்களோடு மிக நெருக்கமாக நீண்ட காலம் வாழ்ந்தும், நபியவர்களைப் பற்றி அதிகமாக அறிந்திருந்தும் மிகக் குறைவாக நபியவர்களின் ஹதீஸ்களை அறிவித்திருப்பதற்குக் காரணம், தம்மை அறியாமல் நபியவர்களைப் பற்றி பொய்யாக ஏதும் தம்மிலிருந்து வந்துவிடுமோ என்ற அச்சம்தான்.

ஆயினும் இன்றைய காலத்தில் பல மார்க்க சொற்பொழிவாளர்கள் ஏதாவது ஒரு விடயத்தை கூறிவிட்டு ஹதீஸ் என்றோ நபிமொழி என்றோ கூறிவிடுகிறார்கள். அண்மையில் ஒரு பொது நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பேச்சாளர் மாணவர்களுக்கு மத்தியில் உரையாற்றும் போது 'யாருக்கு ஒழுக்கம் இல்லையோ அவருக்கு கல்வி இல்லை என்று நபியவர்கள் கூறினார்கள்' என்பதாக குறிப்பிட்டார். ஆயினும் இது ஒரு அறபுப் பழமொழியே அன்றி நபியவர்கள் கூறிய ஹதீஸ் அல்ல என்பதையோ ஹதீஸ் அல்லாத ஒன்றை ஹதீஸ் என்று கூறுவது பெரும் பாவம் என்பதையோ இத்தகையோர் அறிவதில்லை. (ஒழுக்கம் தொடர்பாகவும் கல்வி தொடர்பாகவும் ஆதாரபூர்வமான எத்தனையோ ஹதீஸ்கள் உள்ளன என்பது வேறு விடயம்).

சமூகத்தில் பரவிப் போயுள்ள இத்தகைய போலி ஹதீஸ்கள் சிலவற்றை அடையாளப்படுத்துவதோடு, அவை பற்றி ஆய்வு செய்த ஹதீஸ்கலை இமாம்கள் கூறிய முடிவுகளையும் சுருக்கமாக தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இன்ஷா அல்லாஹ் அவற்றை ஒவ்வொன்றாக நோக்கலாம் :

1. 'நபியே நீங்கள் இல்லையென்றால் இந்த உலகத்தையே படைத்திருக்கமாட்டேன்' - இது இட்டுக்கட்டப்பட்ட பொய்யென்று இமாம் இப்னுல் ஜவ்ஸி தனது 'அல்மவ்ழூஆத்' எனும் நூலிலும் ஷாபிஈ மத்ஹபின் முக்கிய இமாம்களுள் ஒருவராகிய இமாம் ஸுயூதி தனது 'அல்லாலிஈ' எனும் நூலிலும் மேலும் இமாம் ஸன்ஆனி, இமாம் ஷவ்கானி ஆகியோரும் குறிப்பிடுகின்றனர்.

2. 'யாருடைய தொழுகை மானக்கேடானவற்றையும் வெறுக்கத்தக்க காரியங்களையும் தடுக்கவில்லையோ அவருக்கு தொழுகையே இல்லை' - இது நபியவர்களின் பெயரில் இட்டுக்கட்டப்பட்ட செய்தி என்று ஹதீஸ் கலை அறிஞர்களான இமாம் தஹபி தனது 'மீஸானுல் இ.்.திதால்' என்ற நூலிலும் இமாம் இராகி தனது 'தஹ்ரீஜுல் இஹ்யா' என்ற நூலிலும் இமாம் அல்பானி தனது ஸில்ஸிலாவிலும் குறிப்பிடுகின்றனர்.

3. 'நெருப்பு விறகை எரிப்பது போன்று பள்ளிவாசலுக்குள் அமர்ந்து பேசுவது நன்மைகளை அழித்துவிடும்'- இது நபி மீது இட்டுக்கட்டப்பட்ட பொய்யான செய்தி என்று அல்லாமா ஸுப்கி தனது தபகாதுஷ் ஷாபிஇய்யா என்ற நூலிலும் இமாம் இராகி தனது தஹ்ரீஜுல் இஹ்யா என்ற நூலிலும் இமாம் அல்பானி தனது ஸில்ஸிலாவிலும் குறிப்பிடுகின்றனர். (பள்ளிவாசலுக்குள் வீண் பேச்சுகள் பேசக்கூடாது என்பது தனியான விடயம். அதற்காக நபி கூறாத ஒன்றை நபி கூறியதாக இட்டுக்கட்ட முடியாது)

- இன்ஷா அல்லாஹ் தொடரும்-

- ஏ.ஆர்.எம். றிஸ்வான் (ஷர்கி)

## மாதம் ஒரு துஆ

**குழந்தைகளுக்கு தீங்கு ஏற்படாமலிருக்க...**

(நமது குழந்தைகளுக்கு அனைத்து வகையான தீங்குகளிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்க பின்வரும் துஆவை ஓதுவது நபிவழியாகும். வேறு யாரிடமும் சென்று ஓதிப் பார்க்கத் தேவையில்லை. நாமே இந்த துஆவை மனனம் செய்து நமது குழுந்தைகளுக்கு முன்னிலையில் வைத்து ஓத முடியும். நபியவர்கள் தமது பேரக் குழந்தைகளான ஹஸன், ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரையும் அழைத்து அவர்களுக்கு முன்னிலையில் அடிக்கடி இந்த துஆவை ஓதுவார்கள். இப்ராஹீம் நபியவர்களும் தமது புதல்வர்களான இஸ்மாஈல், இஸ்ஹாக் (அலைஹிமஸ்ஸலாம்) ஆகிய இருவருக்கும் இந்த துஆவையே ஓதியிருக்கிறார்கள். அத்தகைய சிறந்த துஆ இதுவாகும்.)

أُعِيذُكُمَا بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّةِ مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ وَمِنْ كُلِّ عَيْنٍ لاَمَّةٍ

**“உஈதுகுமா பிகலிமாதில்லாஹித் தாம்மஹ் மின் குல்லி ஷைதானின் வஹாம்மஹ் வமின் குல்லி ஐனின் லாம்மஹ்”**

**பொருள்:** ஷைத்தானிலிருந்தும், விஷ ஜந்துக்களிலிருந்தும், தீங்கை ஏற்படுத்தும் கண்ணூறிலிருந்தும் அல்லாஹ்வின் பூரணமான வார்த்தைகளைக் கொண்டு உங்களுக்கு பாதுகாப்புத் தேடுகிறேன்.
(ஆதாரம் : திர்மிதி, அபூதாவூத், முஸ்னத் அஹ்மத்)

# நபிகளாரின் பிறந்த தினம் எப்போது?

நபிகளார் றபீஉல் அவ்வல் மாதத்தில்தான் பிறந்தார்கள் என்பதில் அறிஞர்களிடையே மாற்றுக் கருத்தில்லை. ஆயினும் எத்திகதியில் பிறந்தார்கள் என்பதில் பல்வேறு கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன. அக்கருத்து வேற்றுமைகள் பின்வருமாறு :

1. றபீஉல் அவ்வல் பிறை 2ல் பிறந்தார்கள் என்று ஹதீஸ்கலை அறிஞரான ஹாபிழ் இப்னு அப்தில் பர் குறிப்பிடுகிறார்.
2. பிறை 8ல் பிறந்தார்கள் என்று இமாம் மாலிக், இமாம் ஸுஹ்ரி, அல்ஹுமைதி ஆகியோர்
3. பிறை 9ல் என்று மற்றும் சில அறிஞர்கள்
4. பிறை 10ல் என்று வரலாற்றாசிரியர் இப்னு அஸாகிர், இப்னு திஹ்யா ஆகியோர்
5. பிறை 12ல் என்று இமாம் இப்னு அபீ ஷைபா போன்றோர்
6. பிறை 17ல் என்று சிலரும் பிறை 22ல் என்று மற்றும் சிலரும் தங்களது நூல்களில் குறிப்பிடுகிறார்கள்.

(மேற்குறித்த தகவல்களைப் பார்க்க : அல்பிதாயா வந்நிஹாயா, அஸ்ஸீரா அந்நபவிய்யா - (இமாம் இப்னு கதீர்), அல் இஸ்தீஆப் - (இமாம் இப்னு அப்தில் பர்), அர் ரஹீகுல் மஹ்தூம் - (இமாம் ஸபிய்யுர் ரஹ்மான் அல்முபாரக்பூரி).

இத்தகைய கருத்துகளுள் பெரும்பாலான வரலாற்றாசிரியர்களின் கருத்து நபியவர்கள் றபீஉல் அவ்வல் பிறை 9ல் பிறந்தார்கள் என்பதாகும். முக்கியமாக எகிப்தைச் சேர்ந்த பிரபல வானியல் நிபுணரான மஹ்மூத் பாஷா என்பவர் தனது வானியல் கணிப்பீட்டின் அடிப்படையில் நபியவர்கள் பிறை 9ல் பிறந்தார்கள் என்று நிறுவுகிறார்.

நபியவர்கள் ஒரு தடவை தான் திங்கட் கிழமை பிறந்ததாக குறிப்பிட்டார்களே அன்றி எத்திகதியில் (அதாவது எப் பிறையில்) பிறந்தேன் என்று குறிப்பிடவில்லை. நபியவர்கள் பிறந்த போது அது பற்றி அறிவிப்பதற்கு அப்போது ஸஹாபாக்கள் என்ற சமூகம் இருக்கவில்லை. அதனால்தான் நபியவர்களின் பிறந்த திகதி குறித்து இத்தனை கருத்து வேற்றுமைகள்... ஒவ்வொரு அறிஞரும் தன் ஆய்வுக்குட்பட்ட வகையில் ஒவ்வொரு திகதியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எந்தவொரு கருத்துக்கும் தகுந்த ஆதாரம் இல்லை என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். இவ்வாறான பலத்த கருத்து வேற்றுமைகளுக்கு மத்தியில் நபியவர்கள் பிறை 12ல்தான் பிறந்தார்கள் என்று கூறுவதோ, அத்தினத்தைக் கொண்டாடுவதோ எவ்வாறு ஏற்றுக்கொள்ளத்தக்கது?

அதே வேளை நபியவர்கள் றபீஉல் அவ்வல் பிறை 12ல் மரணித்தார்கள் என்ற தகவல் அனைத்து வரலாற்று நூல்களிலும் ஆதாரபூர்வமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏனெனில் நபியவர்கள் மரணித்த போது அவர்களை அணுவணுவாகப் பின்பற்றிய ஸஹாபாக்கள் இருந்தார்கள். அதனால் அது குறித்து அறிவித்திருக்கிறார்கள். அவ்வாறாயின் நபியவர்கள் பிறந்த தினம் என்று சிலர் கொண்டாடுவது உண்மையில் நபியவர்கள் மரணித்த தினத்திலல்லவா? உலகுக்கு ஒளியாக, உலகத்தார் அனைவருக்கும் அருளாக வந்த நபிகளாரின் மரணம் நிகழ்ந்த தினம் எப்படி சிலருக்கு கொண்டாட்ட தினமாக இருக்க முடியும்? சிந்திப்போம் ! செயற்படுவோம் !


CGS
College for Tech Studies

O,/L, A/L எழுதிய
மாணவர்களுக்கான
கணனி & ஆங்கில
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்.

இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

CGS இன் கணனி கற்கை நெறிகள்

* Certificate in Personal Computer Based Application Packages
* Certificate in Computer Hardware
* Certificate in Web Designing
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Certificate in 3D Max
* Certificate in English

# நபிகளார் பற்றி சில வரிகள்

★ பராஃ ரழியல்லாஹுஅன்ஹுகூறுகிறார்கள் : நபியவர்கள் நடுத்தர உயரமுள்ளவர்கள். அகன்ற தோற்புயம் கொண்டவர்கள். அவர்களது தலைமுடி காதுச்சோணை வரை இருக்கும். ஒருநாள் நபியவர்களை சிவப்பு ஆடையில் பார்த்தேன். அவர்களை விட அழகான ஒருவரை பார்த்ததில்லை... அவர்கள் மனிதர்களில் மிக அழகிய முகமும் குணமும் கொண்டவர்கள். அவர்களது முகம் சந்திரனைப் போன்று வட்ட வடிவம் கொண்டதாக இருக்கும். (புஹாரி, முஸ்லிம்)

★ ஜாபிர் ரழியல்லாஹுஅன்ஹுகூறுகிறார்கள் : ஒருநாள் பௌர்ணமி இரவில் நபியவர்களைப் பார்த்தேன். அப்போது நபியவர்கள் சிவப்பு ஆடை அணிந்திருந்தார்கள். நபியவர்களையும் சந்திரனையும் மாறி மாறிப் பார்த்தேன். நபியவர்களே எனக்கு மிக அழகாகத் தென்பட்டார்கள் ( ஷமாஇலுத் திர்மிதி )

★ அபூஹுரைரா ரழியல்லாஹுஅன்ஹுகூறுகிறார்கள் : நபியவர்களை விட அழகான எதையும் நான் பார்த்ததில்லை. அவர்களது முகத்தில் சூரியன் இலங்கிக்கொண்டிருக்கும். அவர்களை விட வேகமாக நடக்கும் ஒருவரை நான் பார்த்ததில்லை. பூமி அவர்களுக்கு சுருட்டப்பட்டது போல் இருக்கும். நாங்கள் சிரமத்துடன் நடப்போம். நபியவர்களோ சிரமமின்றியே நடப்பார்கள் (திர்மிதி)

★ கஃப் இப்னு மாலிக் ரழியல்லாஹுஅன்ஹுகூறுகிறார்கள் : நபியவர்கள் சிரித்தால் அவர்களது முகம் மிக ஒளி பொருந்தியதாக, பார்ப்பவர்களுக்கு சந்திரனைப் போன்று இருக்கும் (புஹாரி)

★ அனஸ் ரழியல்லாஹுஅன்ஹுகூறுகிறார்கள் : நபியவர்களின் கைகளை விட மென்மையான பட்டாடையை நான் தொட்டதில்லை. அவர்களிடமிருந்து வரும் நறுமணத்தைப் போன்று வேறு எந்த நறுமணத்தையும் நான் முகர்ந்தில்லை. (புஹாரி, முஸ்லிம்)

★ அபூ ஜுஹைபா ரழியல்லாஹுஅன்ஹுகூறுகிறார்கள் : ஒரு தடவை நபியவர்களின் கரத்தை எடுத்து என் கன்னத்தில் வைத்தேன். அது பனிக்கட்டியை விட குளிர்ச்சியாக, கஸ்தூரியை விட மணமிக்கதாக இருந்தது (புஹாரி).

★ நபியவர்கள் கோபித்தால் முகம் சிவந்துவிடும். மாதுளம் பழ முத்துகள் முகத்தில் தூவப்பட்டது போன்றிருக்கும் (திர்மிதி)

★ ஜாபிர் ரழியல்லாஹுஅன்ஹுகூறுகிறார்கள் : நபியவர்கள் மெல்லிய கெண்டைக்கால் உடையவர்கள். அவர்களது சிரிப்பு புன்முறுவலாகத்தான் இருக்கும். அவர்களைப் பார்த்தால் கண்ணில் சுறுமா இட்டது போன்றிருக்கும். ஆனால் சுறுமா இடுவதில்லை (திர்மிதி)

# மீலாத் கொண்டாட்டம்

பிறந்த நாள் கொண்டாட்டம் என்ற கலாசாரம் உண்மையில் முஸ்லிம்களின் கலாசாரமே அல்ல. அது கிறிஸ்தவ கலாசாரமாகும். நபியவர்கள் கூறினார்கள் : 'யார் ஒரு சமூகத்திற்கு ஒப்பாக செயற்படுகிறாரோ அவர் அச் சமூகத்தைச் சேர்ந்தவராவார்' (அபூதாவூத்). இந்த ஹதீஸின் அடிப்படையில் கிறிஸ்தவர்களின் கலாசாரமான பிறந்த நாள் கொண்டாட்டத்தை செயற்படுத்துவோர் அச் சமூகத்தையே சார்ந்துவிடுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. உலகின் மிகப் பெரும் பொக்கிஷமான இஸ்லாத்தைச் சுமந்திருக்கும் நமக்கு பிறிதொரு சமூகத்தின் கலாசாரத்தைப் பின்பற்றும் தேவை ஏன் எழுகிறது?

நபியவர்கள் ஒருபோதும் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடவில்லை. அவர்களை தம் உயிரை விடவும் நேசித்த ஸஹாபாக்களும் நபி பிறந்த தினத்தைக் கொண்டாடவில்லை. அவர்களுக்குப் பின்வந்த இமாம்கள், பெரியார்களும் கொண்டாடவில்லை. நபியவர்களும் ஸஹாபாக்களும் பிரபலமான இமாம்களும் மரணித்து பல நூற்றாண்டுகளின் பின் - அதாவது ஹிஜ்ரி 4ம் நூற்றாண்டில் எகிப்தை ஆட்சி செய்த வழிகெட்ட ஷீஆக்களில் ஒரு பிரிவினரான பாதிமிய்ய ஆட்சியாளர்களே இஸ்லாத்தில் இல்லாத நபி பிறந்த தினக் கொண்டாட்டம் என்ற பாரம்பரியத்தை சமூகத்தில் பரப்பிவிட்டார்கள். இந்த பாதிமிய்யர்கள் முஸ்லிம்களை வழிகெடுப்பதற்காக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது போன்று நடித்து வாழ்ந்த அப்துல்லாஹ் இப்னு மைமூன் அல்கிதாஹ் என்ற யூதனின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் மார்க்கத்துக்கெதிராகவும் முஸ்லிம்களுக்கெரிகாவும் பல்வேறு அக்கிரமங்களைப் புரிந்தார்கள். பள்ளிவாசல்களில் அபூபக்ர், உமர், ஆஇஷா (ரழியல்லாஹுஅன்ஹும்) போன்ற ஸஹாபாக்களை திட்டுகின்ற கலாசாரத்தை உருவாக்கியமை, கியாமுல் லைல் தொழுகையைத் தொழ விடாமல் எகிப்து மக்களைத் தடுத்தமை, ஹஜ்ஜுக்குச் செல்வோரை கொலைசெய்தமை, கஃபாவிலுள்ள புனிதமிகு ஹஜருல் அஸ்வத் கல்லைப் பிடுங்கியமை, இறந்த உடல்களைச் சாப்பிடுமாறு எகிப்து மக்களை நிர்ப்பந்தித்தமை போன்ற அட்டூழியங்களை இவர்கள் புரிந்தார்கள் என்று இமாம் இப்னு கதீர் போன்ற பிரபலமான வரலாற்றாசிரியர்கள் தமது நூல்களில் குறித்துவைத்திருக்கிறார்கள்.

இஸ்லாம் நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய இரு பெருநாட்களையே தந்திருக்கிறது. வழிகேடர்களான இந்த பாதிமிய்ய ஆட்சியாளர்களே நபி பிறந்த தினக்கொண்டாட்டம் என்ற பெயரில் மூன்றாவது ஒரு பெருநாளை உருவாக்கி, இஸ்லாத்திற்கும் அதன் தூதருக்கும் மாறுசெய்தார்கள். இத்தகைய கொடியவர்கள் ஏற்படுத்திய வழிமுறையை இஸ்லாத்தையும் அதன் தூதரையும் நேசிக்கும் நம்மால் எவ்வாறு சரிகாண முடியும்?

ஷாபிஈ மத்ஹபின் முக்கிய இமாம்களுள் ஒருவரான ஹாபிழ் ஸஹாவி கூறுகிறார்கள்: 'நபி பிறந்த தினத்தைக் கொண்டாடுவது என்பது நபியவர்களால் சிறந்த நூற்றாண்டுகள் எனக் குறிப்பிடப்பட்ட காலப் பகுதியில் இருக்கவில்லை, அது பின்னரே உருவாக்கப்பட்டது'. மேலும் பிரபல ஹதீஸ் கலை மேதையான ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் : 'மீலாத் கொண்டாட்டம் என்பது இஸ்லாத்தில் இல்லாத (பித்அத்தான) நடைமுறையாகும். முன் சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த நல்லோர்கள் யாரும் இதைக் கொண்டாடவில்லை'


CGS
இனாஸ் கட்டடம்
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk
உங்களது கணனி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?
சேவைகள்
01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues
இன்றே அழையுங்கள் 0772300420
ஏறாவூரில்
கணனி மற்றும் மடிக்கணனி
(DESKTOP / LAPTOP)
திருத்தம் செய்தல்


# பெறுமதியான கடிகாரப் பரிசை வென்று தரும் ஐந்து கேள்விகள்

1. இஸ்லாத்தில் இல்லாத மீலாத் கொண்டாட்டத்தை சமூகத்தில் பரப்பியவர்கள் யார்?
2. நபியவர்கள் எப்போது மரணித்தார்கள்?
3. இலங்கைத் தேயிலையை பெருமளவில் இறக்குமதி செய்யும் நாடுகள் எவை?
4. நபியவர்களின் ஹதீஸ்களை அதிகமாக அறிவிப்பதற்கு அஞ்சிய சுவனத்தைக்கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட ஸஹாபி யார்?
5. சமூகத்தில் பரவியுள்ள போலி ஹதீஸ் ஒன்று தருக.

---

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **15.02.2013** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் ஒருவருக்கு அழகிய கடிகாரம் பரிசாக வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசிலை வீடு வந்து சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிடப்படமாட்டா.) அல்லது தெரிவுசெய்யப்படுபவர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

## கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதியோரில் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டவர்:

AHF. **ஹுமைஸா**
ஆலையடி வீதி, ஏறாவூர் 02B

**பாராட்டைப் பெறுவோர்:**

1. ALM. ஸித்தீக், அமானுல்லாஹ் வீதி, காத்தான்குடி 06
2. SAF. ஸாபியா, அபூஸாலிஹ் தைக்கா வீதி, ஏறாவூர் 03
3. AH. லைலுல் அக்லியா, காட்டு மாமரத்தடி வீதி, மீரா கேணி, ஏறாவூர்
4. MT. அதீக் அஹ்மத், பழைய சந்தை வீதி, ஏறாவூர் 03
5. சமீனா அன்ஸார், பஷீர் சேகுதாவூத் வாசிகசாலை வீதி, ஐயங்கேணி, ஏறாவூர் 03

## கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்

1. முஸைலமதுல் கத்தாப்
2. தூக்கம், மறதி
3. உமர் றழியல்லாஹுஅன்ஹு
4. ஆஇஷா றழியல்லாஹுஅன்ஹா
5. கலாநிதி ஷிரனி பண்டாரநாயக


மாதம் தோறும் கடிகாரப்பரிசை வழங்குவோர்

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள

**யூரோ போன் வேர்ல்ட்**

இல.17, பிரதான வீதி, ஏறாவூர்
Fax: 065 2240283



> Mobile Phones
> Phone Accessories

Dialog

Mobile Phone Repairing

மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill) மின்சாரப் பட்டியல் இங்கே செலுத்த முடியும்.



மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.

# Cairo College

**Main Street , Eravur – 04.**

2013 / 2014

**A/L COMMERCE**

இலங்கையில் புகழ்பெற்ற ஆசிரியர்கள்

கணக்கியல் - J. சகாயநாதன்
வணிகக் கல்வி – K.K. அரஸ்
பொருளியல் – HMM. பாக்கிர்

**GENERAL ENGLISH**

UK Cambridge பல்கலைக்கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட கற்கை நெறி
பலவருட அனுபவம் கொண்ட ஆசிரியர்கள்

Mohammed Faizal
Special English Trained (Peradeniya) CELTA – UK, CEELT - UK

M.S. Abdul Hai
Special English Trained (Palali)

K.M.A. Cader
Special English Trained

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்,
வெளிநாட்டு வருகைதரு விரிவுரையாளர்கள்.

பதிவுகளுக்கு :
(ஏறாவூர் தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடம்) 077 3480 175, 077 3662 821